# சர்வவியாபி

MISSION PRESS 1840
PONDICHERRY

SARVA VIABI

ESTD:1.3.1907
(Year-115)

09-01-2022 | சமய வளர்ச்சி சமுதாய மறுமலர்ச்சி | 1 | பிலவ வருடம் (மார்கழி 25) | வருட சந்தா ₹ 200 தனிப்பிரதி ₹ 6

புத்தகம் 59 | இதழ் 2 | பக்கம்-12



e-mail:missionpress48@gmail.com
e-mail:missionpress48@yahoo.com
Ph: 0413/ 2334360

ஆசிரியர் : பேரருள்பணி ஆ. அருளானந்தம்
துணை ஆசிரியர் : அருள்பணி L.ஆரோக்கியதாஸ்


# புதிய ஆண்டை அன்னை மரியாவிடம் ஒப்படைப்போம்



- திருத்தந்தை

ஜனவரி முதல் தேதி, அன்னை மரியா இறைவனின் தாய், என்ற பெருவிழா திருப்பலியை புனித பேதுரு பெருங்கோவிலில் நிறைவு செய்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், நண்பகல் 12 மணிக்கு புனித பேதுரு பெருங்கோவில் வளாகத்தில் குழுமியிருந்த திருப்பயணிகளுக்கு மூவேளை செப உரையை வழங்கினார்.

இந்தப் புதிய ஆண்டை அன்னை மரியாவிடம் ஒப்படைத்துத் துவங்குவோம். இந்நாள் நற்செய்தியில் நாம், இடையர்கள் விரைந்து சென்று மரியாவையும் யோசேப்பையும் தீவனத் தொட்டியில் கிடத்தியிருந்த குழந்தையையும் கண்டதாக (லூக் 2:16) வாசித்தோம். அன்னை மரியா, தன் மகனை தீவனத் தொட்டியில் கிடத்தியதன் வழியாக, அவரை நமக்குக் கொடையாகத் தருகிறார். தன் மகனை தனக்கென மட்டும் அவர் வைத்துக்கொள்ளவில்லை. மாறாக, நமக்கு வழங்குகிறார். அக்குழந்தையை உற்றுநோக்கி, வரவேற்று, ஆராதிக்கும்படி நமக்கு அழைப்புவிடுக்கிறார். கடவுள் நம் அருகில் இருக்கிறார் என்பதே அன்னை மரியா நமக்குத் தரும் செய்தி.

நம்மை அச்சத்துக்கு உள்ளாக்கும் சக்தியுடைய ஒருவரை அன்னை மரியா நம்முன் வைக்கவில்லை. மாறாக, நம் அன்பை எதிர்பார்க்கும் ஒரு குழந்தையை முன்வைக்கிறார். மேலிருந்து நமக்கு தீர்ப்பு வழங்குபராக அல்ல, கீழே நம் அருகில் வந்துள்ள ஒரு சகோதரராக இயேசு பாலன் முன்வைக்கப்படுகிறார். நாம் அனைவரும் சகோதரர் சகோதரிகளாக வாழ இக்குழந்தை அழைப்பு விடுக்கின்றது.

பெருந்தொற்றால், வருங்காலம் குறித்த நிச்சயமற்ற நிலையில் வாழும் நமக்கு இயேசுபாலன் வழங்கிய கனிவுடன் கூடிய ஊக்கம் தேவைப்படுகிறது. பெருந்தொற்று, அநீதிகள், சுற்றுச்சூழல் பிரச்னை, உலக சரிநிகரற்ற பொருளாதார நிலைகள் ஆகியவைக் குறித்த அச்சம் பலரில் நிலவுகிறது. இளம் அன்னையர், தங்கள் குழந்தைகளுடன், போராலும் பஞ்சத்தாலும் தங்குமிடங்களை விட்டு வெளியேறி புலம்பெயர்ந்தோர் முகாம்களில் வாழ்வதை இந்நேரத்தில் எண்ணிப் பார்க்கிறேன். போராலும், வன்முறைகளாலும் சிதறிப்போயுள்ள உலகை கட்டியமைக்க, உடன் பிறந்த நிலை என்ற உணர்வு அனைவருக்கும் தேவைப்படுகிறது.

இன்று உலக அமைதி நாளை சிறப்பிக்கின்றோம். மேலிருந்து கொடையாக வழங்கப்படும் அமைதி, கீழிருக்கும் நம் அர்ப்பணப் பகிர்வின் கனியுமாகும். உலகில் அமைதியை நிலைநாட்ட, முதலில் நம் இதயங்களை அமைதியால் நிரப்புவோம். மிகச் சிறியோருக்கும் பராமரிப்பை வழங்குவோம். நீதியை ஊக்குவிப்போம். பகைமை என்னும் நெருப்பை, மன்னிப்புக் கொண்டு அணைப்போம். பிளவுகளின் தீமைகளை அல்ல, இணைப்பின் நல்லவைகளை கைக்கொண்டு நேர்மறை எண்ணங்களை வளர்ப்போம்.

இவ்வாறு, திருத்தந்தையின் புத்தாண்டு நண்பகல் மூவேளை செப உரை இடம்பெற்றது.

ஆசிரியர் பேனா...

# சிந்தனையும் பகுத்தறிவும்

மனிதனின் தனிச் சிறப்பு, சிந்தனையும், பகுத்தறிவும் (சீராக்). சிந்திக்கும் போது படைப்பில் புதைந்து கிடக்கும் உண்மை புலப்படும்; பகுத்தறியும் போது, நன்மை பிறக்கும். சிந்தனையும், பகுத்தறிவும் மனித வாழ்வை சிறப்புறச் செய்கின்றன. சிந்தனைத் திறனும், பகுத்தறியும் ஆற்றலும் கொடையாக கொடுக்கப்பட்டவை. படிப்பும் பயிற்சியும், கல்வியும் அனுபவமும் அவற்றை செழுமைப்படுத்துகின்றன கூர்மைபடுத்துகின்றன.

**கற்றல்:** மற்றவரிடம் இருக்கும் நற்பண்புகளை தாம் பின்பற்ற விரும்புவதும், இறை வார்த்தையை படிப்பதும் கேட்பதும், நல்லோர் சொல் வழி நடப்பதும் தெளிந்த சிந்தனைக்கும், சரியானதை தேர்வு செய்வதற்கும் துணைபுரிபவை. 'இன்று நான் உனக்குக் கட்டளையிடும் இவ்வார்த்தைகள், உன் உள்ளத்தில் இருக்கட்டும். நீ அவற்றை உன் வழிப்பயணத்தின்போதும், நீ படுக்கும்போதும், எழும்போதும் அவற்றைப் பற்றிப் பேசு. உன் கையில் அடையாளமாக அவற்றைக் கட்டிக் கொள், உன் கண்களுக்கிடையே அடையாளப் பட்டமாக அவை இருக்கட்டும். உன் வீட்டின் கதவு நிலைகளிலும் நுழைவாயில்களிலும் அவற்றை எழுது' (இச 6:6-8). கற்ற-ன் சிறப்பினை திருவள்ளுவர் திருக்குறளில் எடுத்துரைக்கின்றார். கற்றல் ஒருவருடைய அறிவை பெருக்கி மேன்மைப்படுத்தும்.

*தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக்*
*கற்றனைத்து ஊறும் அறிவு* (குறள் 396)

**பெற்றோர் துணை:** குழந்தைகள் கற்பதற்கு பெற்றோரும் பெரியவர்களுக்கும் துணை நிற்க வேண்டும். குழந்தைகள் ஈரநிலம் (ஈர மண்) வணைந்து கொடுக்கும் மனதுடையவர்கள். அந்த ஈர நிலத்திலே விழுகின்ற விதை நல்லதாக இருக்க வேண்டும். இதனை கண்காணிப்பது பெற்றோரின் கடமை. குழந்தைகள் பார்ப்பது கேட்பது எல்லாமே நல்லவையாக இருக்கட்டும். பெற்றோரே குழந்தைகளின் முதல் ஆசிரியர்கள். கணினியும், தொடர்பு சாதனங்களும் பரவலாவதற்கு முன்பெல்லாம், குழந்தைகள் தூங்கச் செல்லும் போது நீதிக் கதைகளையும், வரலாற்று நாயகர்களின் வாழ்க்கையையும், பெற்றோர் சுவைபடச் சொல்வார்கள். அவற்றை குழந்தைகள் கேட்டு உறங்கும்போது அவை அவர்கள் மனத்தில் ஊன்றப்பட்ட விதையாக அவர்களின் சிந்தனையை தூய்மைப்படுத்தின. (நன்றி - தினமணி 26.10.2021, இரா.பொன்னாண்டான், சன்றோன் ஆக்குதல் பெற்றோர் கடன்).

**உதவாக் கல்வி:** தெளிந்த சிந்தனையும், பகுத்தாயும் திறனையும் வளர்க்க உதவாத கல்வி தீங்கிழைக்கக் கூடியது. அது, காற்றிலும், பூமியிலும் இருக்கும் நீரை உறிஞ்சி செழித்து வளரும் முட்செடி போன்றாகிவிடும். அது சமுதாயத்திற்கும், தனி மனிதனுக்கும் கேடாகிவிடும் (ஒழுக்கக் கல்வி) அறவழிக் கல்வி என்று அன்று பள்ளி பாட திட்டத்தில் இருந்தது, இன்று அது காணாமல் போய்விட்டது.

**விவி-ய வழி:** நற்சிந்தனையையும் பகுத்தறிவையும் வளர்த்துக் கொள்ள பைபிளில் சீராக் புத்தகம் வழிகாட்டுகிறது. 'கேட்டறிய ஆர்வம் கொண்டால் அறிவு பெறுவாய், பிறருக்குச் செவிசாய்த்தால் ஞானியாவாய், மூப்பர்களின் தோழமையை நாடு... கடவுளைப்பற்றிய எல்லா உரைகளுக்கும் செவிசாய்ப்பதில் ஆர்வம் காட்டு, அறிவுக் கூர்மை கொண்ட பழமொழிகளைக் கேட்காமல் விட்டுவிடாதே. அறிவுக் கூர்மை படைத்தோரை நீ கண்டுவிட்டால், விரைந்து அவர்களிடம் செல். ஆண்டவரின் நெறிமுறைகளை எண்ணிப்பார், அவருடைய கட்டளைகளை எப்போதும் உள்ளத்தில் இருத்து' (சீராக்6:33-37).

**போராட்டம் அவசியம்:** ஊடகங்களும், கணினியும் அரசியல் சூழ்நிலைகளும் இயற்கை சீற்றங்களும் சமுதாய குழப்பங்களும் நுகர்வு கலாச்சாரமும், சார்புமனம், பொருளாசையும் நம்மை சிந்திக்க விடாமலும், (அ) கோணலாக சிந்திக்கவும் செய்யும் காரணங்களாகிவிடுகின்றன. எது ஒன்றையும் நாம் பகுத்தறிய அவை விடுவதில்லை. இப்படிப்பட்ட சூழ-ல் தப்பித்து பிழைக்க வேண்டும். பிறந்துள்ள 2022-ம் ஆண்டிலாகிலும் நாமும், நம் தலைமுறையினரும் தெளிந்த சிந்தனையும், பகுத்தறியும் ஆற்றல் உள்ளவர்களாக இருக்க போராட வேண்டியது அவசியம்.

**கடவுள் உதவி:** இந்த போராட்டத்திலே வெற்றிபெற கடவுளைத் தவிர வேறு உதவி நமக்கு இல்லை. தீமைகளையும் நல்லதாக மாற்றக் கூடியவர் கடவுள்தான் (தொநூ 10:20). பழயவைகளை மறந்துவிடு, அவைகளைக் குறித்து சற்றும், சிந்திக்காதே, நான் உனக்கு புதிய செயலை செய்வேன் என்று வாக்கு கொடுப்பவர் கடவுள் (எசா 43:18). எந்த தீமையும் உங்கள் குடும்பத்தின் மீது கண்வைக்க விடமாட்டேன் (விப 34:23-24) என்று நம்மை ஆசீர்வதிப்பவர். கடவுளை சார்ந்திருந்தால் மட்டுமே நாம் படைப்பின் மணிமுடியாக திகழ முடியும்; படைப்பில் கிடக்கும் உண்மையை புரிந்து கொண்டவர்களாக, நல்லவற்றை தேர்ந்து கொள்ளும் அறிவுடையோராக வாழ முடியும். எனவே கடவுளை சரணடைவோம்.

**அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்கள்**



16-01-2022

# நாம் புதுமைகளின் கருவிகள்

அருள்திரு. R. ஜெயந்த் ராயன்,
வத்திக்கான், உரோமை



**எசா.62:1-5 1கொரி.12:4-11 யோவான்.2:1-12**

மற்றவர்களிடம் நாம் காட்டுகின்ற கனிவும் இரக்கமும் புதுமைகளின் துவக்கம். இரக்கமும், கனிவும் ஒரு இணைந்த முயற்சி. நல்லெண்ணம் படைத்தவர்களோடு ஒன்று சேர்ந்து ஏற்படுத்துகின்ற கூட்டுமுயற்சி இச்சமுதாயத்தில் மிகப்பெரிய மாறுதல்களை ஏற்படுத்தும் என்பதை சமீபத்தில் ஏற்பட்ட மழைவெள்ளம் நமக்கு உணர்த்திச் சென்றுள்ளது. முகம் தெரியாத மனிதர்கள், முன்பின் அறிமுகமில்லாதவர்கள் ஆனால் அவர்கள் அனைவருக்கும் இருந்த ஒரே நோக்கம் மனிதம் காக்கப்பட வேண்டும் என்பதே. அன்னை மரியாவின் மூலம் கடவுளின் இரக்கம் பொங்கிவழிவதை இப்புதுமை நமக்கு உணர்த்துகின்றது. “முகமலர்ச்சியோடு கொடுப்பவரே கடவுளின் அன்புக்குரியவர்” 2கொரி 9:7 என்கிற வாக்கியத்திற்கிணங்க, அன்னைமரியாவின் அன்புத் தூண்டுதல் இயேசுவை புதுமை செய்யப் பணித்தது.

**இயேசுவின் புதுமையில் அன்னை மரியாவின் பங்கு**

புனித யோவான் நற்செய்தியாளர், அன்னை மரியாவை இரண்டு முறை தன்னுடைய நூலிலே வெளிக்காட்டுகின்றார். ஒன்று, கானாவூர் திருமணத்தின் போது (இயேசுவின் நற்செய்திப் பணியின் துவக்கம்), மற்றொன்று சிலுவை அடியினில் (இயேசுவின் நற்செய்திப் பணியின் முடிவில்). அன்னை மரியாவின் பங்கு இயேசுவின் வாழ்வில் மிகப்பெரிய தாக்கத்தை உண்டாக்கியிருப்பதை இது உணர்த்துகின்றது. அதனால்தான், அன்னை மரியா அவர் நிலையிலிருந்து இறங்கிவந்து இயேசுவிடம் இந்தப் புதுமையை நிகழ்த்தும்படி மறைமுகமாக கேட்டுக்கொள்கின்றார். இது இயேசுவின் முதல் புதுமையாக விவிலியத்திலே மேற்கோள் காட்டப்படுகின்றது. அப்படி யென்றால், அன்னை மரியாவுக்கு எப்படித் தெரியும் இயேசு புதுமைகள் செய்வார் என்று? ஒரு நல்ல தாய் தன் குழந்தை யைப் பற்றி நிச்சயம் அறிவார். அது மட்டுமல்ல அன்னைமரியா இயேசுவைக் கருத்தரிக்கும் முன்பே, அவரைக் குறித்து வானதூதர் கூறிய வார்த்தைகள், அவரைக் கோவிலில் காணிக்கையாக்கியபோது சிமியோன் அவரைக் குறித்து கூறிய வார்த்தைகள், 12 வயதில் அவர் எருசலேமில் அறிஞர்களோடு நடத்திய விவாதங்கள் இவையெல்லா வற்றையும் மனதில் இருத்தி வைத்திருந்த அன்னை மரியாவுக்கு நிச்சயம் தெரியும், தன் மகன் இயேசு புதுமை செய்வார் என்று. ஏன்? உலக வரலாற்றில் கூட பல ஒப்பற்ற தலைவர்கள் “தங்கள் வாழ்க்கையின் வெற்றி இரகசியமே தங்களுடைய அன்னையர்தான்” என்று சொல்ல நாம் கேள்விப்பட்டிருக்றோம்.

**புதுமைகள் பொதுநன்மைக்காகவே**

“பொது நன்மைக்காகவே தூய ஆவியாரின் செயல்பாடுகள் ஒவ்வொருவரிலும் வெளிப்படுகின்றது” 1கொரி 12:7. அன்னை மரியாவிடம் துலங்கிய அந்த பொது நன்மைக்கான எண்ணம் தூய ஆவியின் செயல்பாடு. அதை அன்னை மரியா தனக்காகவோ அல்லது தன் குடும்பத்திற்காகவோ பயன்படுத்தாமல் பொதுவாழ்விற்காக பயன்படுத்துவது, நம்மையும் அவரைப் போல மாறச்சொல்லும் நிலைப்பாடாகும். அதைத்தான் இரக்கத்தின் சமூகக் கடமைகளாக, திருத்தந்தை பிரான்சிஸ் இரக்கத்தின் ஆண்டிலே நமக்கு உணர்த்தினார். பசியாய் இருப்பவர்களுக்கு உணவு கொடுத்தல், தாகமாய் இருப்போரின் தாகம் தணித்தல், ஆடையின்றி இருப்போருக்கு ஆடை அணிவித்தல், அன்னியரை ஏற்றுக்கொள்ளுதல், நோயாளிகளைக் குணப்படுத்துதல், சிறை யிலிருப்போரைச் சந்தித்தல், இறந்தோரை நல்லடக்கம் செய்தல் என்று, தூய ஆவியின் செயல்பாடுகள் இவற்றிற்காகத்தான் நம்மில் வெளிப்படுவதாக திருத்தந்தை அறிவுறுத்தினார்.

எனவே, இன்றைய நாளில் நாம் நம்மையே கேட்டுக்கொள்ள வேண்டிய கேள்வி என்னவென்றால், கடவுள் எனக்கென்ன பரிசளித்திருக்கின்றார்? எனக்கென்று கொடுத்திருக்கும் பரிசு களையும் திறமைகளையும் என்னுடைய தனிப்பட்ட விருப்பத்திற்காக பயன்படுத்துகின்றேனா? அல்லது சமுதாயத்தின் நலனுக்காக பயன்படுத்துகின்றேனா? என்று சிந்தித்துப் பார்க்கத்தான் இன்றைய நற்செய்தி நமக்கு அழைப்பு விடுக்கின்றது. அதைத்தான் ஒரு இறையியலாளர் இயேசுவின் புதுமை நம்மிலே, நம் சமுதாயத்திலே நிகழ வேண்டுமென்றால் ஐந்துபடி நிலைகளை நமக்கு அறிவுறுத்துகின்றார்.

**அழைப்பு:** நமக்குள் புதுமை நிகழ வேண்டுமென்றால், முதலில் நாம் இயேசுவை நம் உள்ளத்தில் வரவேற்கத் தயாராக இருக்க வேண்டும். அவருடைய உதவியும் அருளும் இன்றி எதுவும் இல்லை என்ற எண்ணமும் நம்பிக்கையும் உருவாக வேண்டும்.

**பரிந்துரை:** புதுமை நிகழ பரிந்துரை அவசியமாகிறது. எவ்வாறு அன்னை மரியா இரசம் தீர்ந்தவுடனே இயேசுவிடம் சென்று புதுமை செய்ய பரிந்துரைத்தாரோ, அதே போன்று நாமும் நம் சுமைகள் அனைத்தையும் இயேசுவிடம் சமர்ப்பிக்க வேண்டும். நம் பிரச்சனைகளுக்கு நாமோ மற்ற மனிதர்களோ தீர்வினை உருவாக்க முடியாது. நாம் இயேசுவிடம் அதற்கான பரிந்துரையைச் செய்யவேண்டும்.

**அறிவுறுத்தலுக்கு கீழ்ப்படிதல்:** திருமணத்தில் வேலையாள்களைப் பார்த்து அன்னைமரியா, இயேசு சொல்வதையெல்லாம் செய்யுங்கள் என்று அறிவுறுத்தினார். அவர்களும் அவ்வாறே செய்தனர். இயேசுவின் வார்த்தைக்கு கீழ்ப்படிதல் நம் வாழ்க்கையில் பெரிய மாற்றத்தைத் தரும். மிகப் பெரிய தாக்கத்தை உருவாக்கும்.

**கருவியாய் இருத்தல்:** இயேசு கானாவூர் திருமணத்தில் புதுமைக்கு தண்ணீரை ஒரு கருவியாகப் பயன்படுத்தினார். மக்களுக்கு உணவளிக்க ஐந்து அப்பத்துண்டுகளையும், இரண்டு மீன் துண்டுகளையும் கருவியாய் பயன்படுத்தினார். இவ்வாறு, கடவுள் தன்னை வெளிப்படுத்த எதை வேண்டு மானாலும், யாரை வேண்டுமென்றாலும் கருவியாய் பயன் படுத்தலாம். எனவே, நம்மை அவர் பயன்படுத்த அனுமதிக்க வேண்டும்.

**அகத் தூண்டுதல்:** இயேசு செய்த புதுமையைக் கண்ட மக்கள், அப்போஸ்தலர்கள் அவர் மீது நம்பிக்கை கொண்டனர், புதிய உத்வேகத்தை அடைந்தனர். நம் வழியாக இறைவன் புதுமைகளைச் செய்கின்றபோது நாமும் அகத் தூண்டுதல் பெற்று அவரிடம் நம்பிக்கை கொள்ள அழைக்கப்படுகின்றோம்.

# அருள்தந்தை V. ஜான்சன் மரிய ஜோசப் அடிகளார் இறையடி சேர்ந்தார்



**பிறப்பு:** புதுவை - கடலூர் உயர்மறைமாவட்டம் வேலந்தாங்கல் பங்கைச் சார்ந்த திரு.V.வனத்தையன் - திருமதி. V. லூர்துமரி இவர்களுக்கு 02.10.1988ல் அருட்தந்தை V.ஜான்சன் மரியஜோசப் அவர்கள் மகனாக பிறந்தார்.

**கல்வி:** தனது தொடக்கக்கல்வியை, வேலந்தாங்கலிலுள்ள R.C தொடக்கப்பள்ளியிலும், நடுநிலைக் கல்வியை வேலந்தாங்கலிலுள்ள இம்மாகுலேட் உயர்நிலைப் பள்ளியிலும் பயின்றார்.

திண்டிவனம் புனித அன்னாள் மேல்நிலைப் பள்ளியில் 11 மற்றும் 12 ம் வகுப்புக் கல்வியை முடித்து, 2008 ம் ஆண்டு கடலூர், புனித ஆக்னஸ் குருமடத்தில் சேர்ந்து லத்தீன் படித்தார். குருமட மாணவராக இருந்தபோது, 2009-2012 வரை தனது கல்லூரிப் படிப்பை கடலூரில் உள்ள புனித வளனார் அறிவியல் மற்றும் கலைக் கல்லூரியில் முடித்தார்.

**குருமடப் பயிற்சி:**

கல்லூரி படிப்பிற்கு பிறகு ஓராண்டு (2012 -2013) ஆன்மிக பயிற்சிக்காக கடலூர் புனித யோவான் குருமடத்தில் பயின்றார். அதன்பின்பு 2013-2016 வரை 3 ஆண்டுகள் தத்துவவியல் படிப்பை பெங்களூரு புனித பேதுரு பாப்பிறை குருமடத்தில் பயின்றார். மேல்நாரியப்பனூர், புனித அந்தோணியார் மேல்நிலைப்பள்ளியில் ஓராண்டு களப்பணி புரிந்தார். 2017-2020 வரை தனது இறையியல் படிப்பினை பெங்களூரு, புனித பேதுரு பாப்பிறை குருமடத்தில் முடித்தார்.

**குருத்துவ அருட்பொழிவு:**

16.09.2020 அன்று புனித ஜென்மராக்கினி பேராலயத்தில், மறைந்த மேதகு. அந்தோணி ஆனந்தராயர் அவர்களால் திருத்தொண்டராக உயர்த்தப்பட்டார்.

18.06.2021 அன்று புனித ஆக்னஸ் இளங்குருமடத்தில் புதுவை-கடலூர் உயர்மறைமவாட்ட அப்போஸ்தலிக்க பரிபாலக ஆயர் மேதகு அந்தோனிசாமி பீட்டர் அபீர் அவர்களால் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார்.

**இறைப்பணி:** 15.07.2021 முதல் விழுப்புரம், புனித பிரான்சிஸ் சவேரியார் ஆலயத்தில் உதவிப் பங்குத்தந்தையாக சிறப்பாக பணியாற்றி வந்தார்.

**இறப்பும் அடக்கமும்:**

புத்தாண்டை முன்னிட்டு விழுப்புரம் புனித பிரான்சிஸ் சவேரியார் பங்கின் கிளை கிராமமான தும்பூரில் இரவு 10 மணிக்கு திருப்பலி நிகழ்த்திவிட்டு தனது இருசக்கர வாகனத்தில் திரும்பிக்கொண்டிருந்தபோது எதிர்பாராதவிதமாக சாலை விபத்தில் சிக்கினார். அருகில் இருந்தவர்கள் அவரை மீட்டு, விழுப்புரம் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனையில் சேர்த்தனர். ஆனால் மருத்துவர்கள் அவர் ஏற்கெனவே (12.15 மணியளவில்) இறந்துவிட்டதாக தெரிவித்தனர். பின்னர் அருட்தந்தையின் உடலானது பிரேத பரிசோதனை செய்யப்பட்டு அவரது பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டது. 02.01.2022 அன்று அருட்தந்தையின் சொந்த ஊரான வேலந்தாங்கலில் நண்பகல் 1 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு மக்கள் மரியாதை செலுத்தினர். அதன்பிறகு அவர் பணிசெய்த விழுப்புரம், புனித பிரான்சிஸ் சவேரியார் ஆலயத்தில் மாலை 4.00 மணிக்கு திருப்பலி நிறைவேற்றப்பட்டு மக்கள் கண்ணீர் அஞ்சலி, மலரஞ்சலி செலுத்தினர். அதனைத் தொடர்ந்து அன்று இரவு 8.00 மணிக்கு அருட்தந்தையின் உடலானது புதுவை-கடலூர் உயர்மறைமாவட்ட பேராயர் இல்லத்திற்கு கொண்டுவரப்பட்டு மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. 03.01.2022 (திங்கட்கிழமை) அன்று காலை 11.00 மணிக்கு, புதுவை-கடலூர் உயர்மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலக ஆயர் மேதகு அந்தோனிசாமி பீட்டர் அபீர் அவர்களால் திருப்பலி நிறைவேற்றப்பட்டது.

அருட்தந்தை. ஆல்பர்ட் பெலிக்ஸ் அவர்கள், "ஆபிரகாம் தனது ஒரே மகனை கடவுளுக்கு கொடுக்க முன்வந்தது போல, அருட்தந்தையின் பெற்றோர்கள் தங்கள் மகனை கடவுளுக்காக கொடுத்திருக்கின்றனர், மேலும் அருட்தந்தை அவர்கள் இயேசுவைப்போல தனது 33வது வயதில் இறைவனடி சேர்ந்திருக்கிறார்" என்று திருப்பலி முன்னுரை வழங்கினார்.

"இறப்பு என்பது ஒரு மறைபொருள், புரிந்துகொள்ள முடியாத ஒன்று. இருப்பினும் இறைமகன் இயேசு இறப்பிற்கு ஓர் அர்த்தத்தைக் கொடுக்கிறார். என்னில் விசுவாசம் கொள்பவர் இறப்பினும் வாழ்வார் என்று லாசரின் உயிர்ப்பு நிகழ்ச்சியில் கூறுகிறார். திருத்தந்தை 16ம் ஆசிர்வாதப்பரும்கூட, நாம் சாவைக் கண்டு அச்சப்படுகிறோம், ஆனால் நிலைவாழ்வின் ஒரு பகுதியே இறப்பு ஆகும்" என்று ஆயர் மறையுரை ஆற்றினார்.

அருட்தந்தை D.S அந்தோணிராஜ் அவர்கள் நன்றி கூறினார்.

திருப்பலியில் நூற்றுக்கும் மேற்பட்ட குருக்களும், அருட்கன்னியரும் மற்றும் திரளான இறைமக்களும் கலந்து கொண்டு செபித்தனர்.

திருப்பலிக்குப்பின் அருட்தந்தையின் உடலானது, பேராலய வளாகத்திலுள்ள குருக்கள் கல்லறையில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

## இறைவார்த்தையில் இயற்கை

- அருள்சகோதரி **டெரன்ஸ்மேரி,** FIHM கடலூர்

**கவியுரை - 27**



# இயேசுவைப் பிரதிபலிக்கும் கெத்சமனி

♣ **கெத்சமனி என்றழைப்பது ஏனோ?**
அது............
பூக்கள் விரும்பும் பூங்காவனம்!
இலைகள் இன்புறும் இன்பவனம்!
மரங்கள் மகிழ்ந்திடும் நந்தவனம்!
தென்றல் விளையாடும் தூயவனம்!
பறவைகள் களிக்கும் பிருந்தாவனம்!
மனிதர்கள் நிம்மதி காணும் அன்புவனம்!
மொத்தத்தில் அது ஒரு புனிதவனம்!
அதுதான் கெத்சமனி எனும் தெய்வவனமாகும்.

**கெத்சமனி** என்ற வார்த்தைக்கு
**ஒலிவ எண்ணெய் எடுக்கும் இடம்**
என்பது பொருளாகும்.
2000 மற்றும் 3000 ஆண்டுகளுக்கும்
பழமையான ஒலிவ மரங்கள் இன்றும்
இங்குள்ளது என்கிறது இக்கால வரலாறு.

♣ **கெத்சமனி எங்கே உள்ளது?**
அது.............
எருசலேமிற்கு அருகே உள்ள
கெதரோன் பள்ளத்தாக்கின் குறுக்கே இருக்கும்
ஒலிவ மலைமுகட்டின் அடிவாரத்தில் அமைந்துள்ளது.

♣ **இயேசுவும் கெத்சமனியும்**
அது...........
இயேசு **அதிகம் விரும்பிச் சென்ற இடம்.**
அங்கே, **தந்தையிடம் செபித்தார்.**
தந்தையோடு அன்புறவுகொள்ள
**அதிகாலைப் பொழுதில்** இங்குதான் சென்றார்.
இறப்பதற்குமுன்கூட தந்தையிடம் செபிக்க
இவ்விடத்திற்குதான் இயேசு சென்றிருக்கிறார்.
**சீடர்களிடம் பேசினார்.**
**தன்னோடு விழித்திருந்து** செபிக்கும்படி
சீடர்களிடம் கேட்டுக்கொண்டதும் இவ்விடத்தில்தான்.
இங்குதான், **வியர்வையில்** நனைந்தார்,
**கண்ணீர்** வடித்தார், **இரத்தம்** சிந்தினர்.
இங்குதான், **துன்பத்தின் உச்சக்கட்டத்திற்கு**
சென்றார்.
“இத்துன்பக் கிண்ணம் என்னை விட்டு அகலட்டும்”
என்று **இயேசு கதறியதும்** இவ்விடத்தில்தான்.
“ஆயினும் உமது சித்தப்படியே ஆகட்டும்” என்று
**இயேசு தாழ்ச்சியுடன் துன்பத்தை**
**ஏற்றுக்கொண்டதும் இவ்விடத்தில்தான்.**

மேலும்,
இயேசுவின் **தெய்வமுகத்திற்கு**
யூதாஸ் **பொய் முத்தம்**
கொடுத்ததும் இவ்விடம்தான்.
இயேசு **கைது செய்யப்பட்டதும்** இவ்விடம்தான்.
பேதுருவால், வெட்டப்பட்ட **மால்குவின் காது**
**இயேசுவால் ஒட்டப்பட்டதும்** இவ்விடத்தில்தான்.

♣ **இன்றைய கெத்சமனி.**
கிறிஸ்தவத்தில் பெரும் **அதிர்வுகளை**
ஏற்படுத்திய இவ்விடம் இன்று வரலாற்றில்
சிறப்பிடம் பிடித்துவிட்டது.
இயேசு கடைசியாக செபித்த
பாறையின் ஒருபகுதியில்தான்
**“அனைத்து நாடுகளின் ஆலயம்”**
Church of all nation
அமைக்கப்பட்டுள்ளது.
16 நாடுகளின் உதவியுடன்
இந்த ஆலயம் கட்டப்பட்டது
என்பது வரலாற்றுப் பதிவாகும்.

♣ **கெத்சமனி சொல்லும் பாடம்**
இயேசு
**ஆன்மீக துன்பம்** அனுபவித்த கெத்சமனியில்
எங்கு நோக்கினும் **ஒலிவ மரங்கள்**
ஓங்கி உயர்ந்து காணப்படும்.
இந்த ஒலிவ மரங்கள் தரும்
ஒலிவ எண்ணெய்கூட இன்று
**இயேசுவை அழகாய் பிரதிபலிக்கிறது.**

எவ்வாறெனில்,
ஒலிவ மரங்களிலிருந்து பிழிந்தெடுக்கப்படும்
முதல் தரமான எண்ணெய்
துயதாக இருக்கும் என்பதால்,
அதை **அர்ச்சிப்பு சடங்குகளுக்கும்,**
இரண்டாம் தரமான எண்ணெய்
**உணவுகள் சமைப்பதற்கும்,**
மூன்றாம் தரமான எண்ணெய்
**விளக்குகள் எரிப்பதற்கும்,**
நான்காம் தரமான எண்ணெய்
**பல்வேறு சுத்தப் பணிகளுக்கும்**
என பலநிலைகளில் பயன்பட்டு
இயேசுவைப் பிரதிபலித்துக்கொண்டு
**இயேசுவின் மௌனசாட்சியாக**
இன்றும் திகழ்கின்றது.

**பிழியப்பட்ட இயேசுவின் இரத்தமோ.**
முதலாவதாக, **ஆன்மதாகம் தீர்ப்பதற்கும்,**
இரண்டாவதாக, **ஆன்மீக நிறைவைத்**
**தருவதற்கும்,**
மூன்றாவதாக, **உலகிற்கு ஒளியாகவும்,**
நான்காவதாக, **பாவக்கறைகளை கழுவுவதற்கும்,**
நமக்கு உதவுவது அதிசயமன்றோ!!!
**நாமும் இப்புவியில் இயேசுவைப் பிரதிபலிக்க,**
**ஒலிவ மரங்களைப் போன்று**

**பிழியப்பட அனுமதிப்போம்!**
**இயேசு ஆறுதல் தேடி கெத்சமனி தோட்டம்**
**சென்றது போல நாமும்,**
**இறை தந்தையிடம் ஆறுதல் பெற**
**கெத்சமனி தோட்டமாகிய ஆலயம்**
**நோக்கி அன்றாடம் செல்வோம்!**

# இயேசு பிறந்தாரா? பிறக்கின்றாரா?? பிறப்பாரா???

அருள்தந்தை அ.பெஞ்சமின்

சென்ற இதழ் தொடர்ச்சி....

கேளுங்கள் வானங்களே! செவிசாயுங்கள் வையகமே!

ஏனெனில் யாவே பேசினார், பிள்ளைகளப்

பேணினோம் வளர்த்தோம்

அவர்களே எதிர்த்தார்கள் நம்மை.

எருது தன் உரிமையாளரை அறிந்துகொள்ளுகிறது.

கழுதை தன்தலைவனின் கொட்டகையை

இஸ்ராயலர் அறிந்து கொள்ளவில்லை

என்மக்கள் என்னைப் புரிந்துகொள்ளவில்லை. (1.2-3)

எபிரேயத்தின்படி அமைந்துள்ள பாடம் மிகவும் வன்மையான நடையிலும் வார்த்தையிலும் அமைந்துள்ளது. நடையானது ஞானநூல்களின் இலக்கிய நடையை ஒத்துள்ளது. இந்தப்பாடப் பகுதியானது கி.மு.702 இல், செனாகரிப் என்ற அசிரீய தளபதி எருசலேமை முற்றுகையிட்டுத் தாக்கிய காலத்தைச் சார்ந்ததாக அறிஞர் கருதுகின்றனர். தம்மை மறந்து மற்ற கடவுளர்பின் சென்ற தம்மக்களைப் பார்த்து யாவே கூறுகிறார்.

இருவர்க்கிடையே ஓர் உடன்படிக்கையை நிறுவும்போது சாட்சிகளைச் சுட்டியுணர்த்துவர். கடவுளர்களையோ, மனிதர்களையோ, படைப்புப் பொருட்களையோ குறிப்பிடுவர். இங்கு யாவே வானங்களையும், வையகத்தையும் சாட்சிகளாகக் கூறுகிறார். வானகம் மேலே உள்ளது, வையகம் கீழே உள்ளது. இரண்டு முனைகளும் - கோடிகளும் கூறப்படுவதால் எல்லாவற்றையும் அழைக்கிறார் என்பதுதான் பொருள். இதற்கு கோடிமுனை (Polarity) அணி என்று பெயர். இரவு-பகல் என்றால் எல்லா நேரமும், மாலை, நண்பகல்... என்றெல்லாம் என்பது பொருள்.

எருது கழுதை வீட்டுவிலங்குகள், ஐந்தறிவு உடையவை. இவைகள் தங்கள் தலைவரை, முதல்வரைக் கண்டு பிடிக்கின்றன. ஆறறிவு கொண்ட, அன்பால் அழைக்கப்பட்ட, தேர்ந்தெடுக்கப்பட்ட இஸ்ராயலர் தம்மைத் தெரிந்துகொள்ளவில்லை, ஏற்று வாழவில்லை என்று யாவே கூறுகிறார். ஞான இலக்கியங்களில் தந்தை மகனுக்கு அல்லது மகளுக்கு அறிவுரை கூறும்போது ''மகனே கேள்'' ''மகளே செவிமடு'' என்று விளித்துக் கூறுவர். இந்தப் பாணியில்தான் நாம் குறிப்பிட்ட பாடத்தில் இஸ்ராயலருடன் யாவே பேசுகிறார்.

இந்த வார்த்தைகளை இயேசு இன்று நம் ஒவ்வொருவரையும் பார்த்து கூறுகிறார். காளைகள் எனக்குப் பிறக்க இடம்கொடுத்தன, ஆடுமாடுகள் நான் குழந்தையாய்ப் பிறக்க இடம் அளித்தன. என் உடன்பிறப்புகளான நீங்கள் ஒவ்வொருவரும் உள்ளத்தில் பிறக்க இடம் தருகிறீர்களா? சத்திரத்தில்... இடம் கிடைக்கவில்லை (லூக் 2.7) என்பது அன்றைய நிலை, என் சகோதர, சகோதரிகள் உள்ளத்தில், இல்லத்தில் இடமில்லை என்பது இன்றைய நிலை. பெற்றோர்-பிள்ளைகள், கணவன்-மனைவி, அண்ணன்-தம்பி, அக்கா-தங்கை, அண்ணன்-அக்காள், தம்பி-தங்கை போன்றவர் எல்லாம் உறவுகொண்டு, நல்-ணக்கம் இல்லாமல் பிணக்குடன் இருந்தால் எப்படி குழந்தை இயேசு உண்மையில் பிறந்துவிட்டார் என்று கூறமுடியும்? நம் வீட்டிலோ கோவி-லோ இருக்கும் குடி-ல் குழந்தை இயேசு இருக்கிறாரா? பணம், பதவி, பட்டாடை, பணக்காரர் குடிலைச் சூழ்ந்து இருக்கலாம், தொட்டி-ல் குழந்தை இயேசு இல்லாமல் கா-யாக இருக்கலாம். ஆடு, மாடு, கழுதை, காளைகள் சூழ்ந்து இருக்கலாம், அங்கே குழந்தை இயேசு குடி-ல் தவழலாம். இயேசு என் இதயத்தில் பிறந்துவிட்டாரா? இல்லத்தில் பிறந்து விட்டாரா? குடும்பத்தில் பிறந்து விட்டாரா? சிந்தித்துப் பதில் அளிப்போம். மாக்கள் எனக்கு இடம் அளித்தன, அளிக்கின்றன. ஆனால் மக்கள் நீங்கள்...? ●

---

## விண்ணக வாழ்வின் 10-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



தோற்றம்: 02-07-1915

மறைவு: 12-01-2012

**Dr.A.BENEDICT,** M.B.B.S (Fr)

**@ MARIE RAYMOND BENEDICT APPASAMY**

துணிவுடன் இருங்கள், நான் உலகின்மீது வெற்றிகொண்டுவிட்டேன் - யோவா 16:33

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக 12-01-2022 மாலை 5.30 மணிக்கு புதுவை ஜென்ம ராக்கினி மாதா பேராலயத்தில் திருப்பலி நிறைவேற்றப்படும். இவரது ஆன்ம இளைப் பாற்றிக்காக செபிக்க வேண்டுகிறோம்.

பிரிவால் துயருறும்
மகன்கள், மருமகள்கள், மகள்,
மருமகன்,பேரப்பிள்ளைகள் மற்றும்
குடும்பத்தினர்கள்.

---

## விண்ணக பிறப்பின் 16–ஆம் நாள் நினைவு



தோற்றம்: 23-03-1933

மறைவு: 27-12-2021

**L. கபிரியேல்**

விண்ணக தந்தையே இறைவா! நீர் எங்களுக்கு அளித்த உம் மகன் நேரிய வழியில் வாழ்ந்து மரித்த அவருக்கு உம் விண்ணக வீட்டில் என்றும் மகிழ்ந்திருக்கும் வாழ்வை அளிக்க உம்மை மன்றாடுகின்றோம். - ஆமென்.

**திருப்ப-:**11-01-2022 செவ்வாய்கிழமை காலை 11.00 மணிக்கு புனித லூர்து அன்னை திருத்தலம், வில்-யனூர்.

பிரிவால் வாடும்
மனைவி: G.வியாகுல மேரி
மகள்கள், மகன்கள், மருமகள்கள்
பேரப்பிள்ளைகள் மற்றும்
உறவினர்கள்.



# வசந்தமாய் வாழ்வு

-அருள்பணி. **M. ஜான் கென்னடி,**
முதல்வர் பொறுப்பு, புனித அந்தோணியார் பள்ளி, நெய்வேலி.

## 59. பகிர்வு

பகிர்ந்து வாழ்வதே பயனுர வாழ்தல். செடி தனது கூந்தலில் சூடி மகிழப் பூப்பதில்லை. மரம் தனக்கே என்று கனிகளைக் கிளைகளில் தக்க வைத்துக் கொள்வதில்லை. உள்ளே வரும் காற்றை வெளியே விடாத பந்து, காலில் உதைபடுகிறது. ஒரு துளையில் வரும் காற்றை, மறுதுளையில் இசையாக வெளிப்படுத்துவதால்தான் புல்லாங்குழல் உதடுகளால் முத்தமிடப்படுகிறது. 'ஒரு பக்கம் வருவது மறுபக்கம் தருவதற்காகவே' என்ற இயற்கையின் உண்மையை மனிதன் புரிந்துகொள்ள வேண்டும். பிறருடன் தன்னிடமிருப்பதை பகிர்ந்து கொள்ளும் போது பொருள் குறைந்தாலும் மகிழ்ச்சி கூடும். எனவேதான் வள்ளுவர்,

*ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல் தாமுடைமை*
*வைத்திழக்கும் வன்க ணவர்.*

'இல்லாதவருக்குக் கொடுப்பதால் கொடுப்பவரும் பெறுபவரும் முகத்தாலும் அகத்தாலும் மகிழ்ச்சி அடைவர். பிறர்க்குக் கொடுக்காமல் பொருளைச் சேமித்து வைத்துப் பிறகு அதை இழந்துவிடும் கொடியவர்கள் அம்மகிழ்சியை அறிவார்களோ?' என்று வினா எழுப்புகிறார்.

டால்ஸ்டாய் எழுதிய கதையொன்றின் சுருக்கம் - சைமன் எனும் செருப்பு தைக்கும் தொழிலாளி ஒரு நாள் தனக்கு வரவேண்டியிருந்த கூலியை வசூல் செய்வதற்காக வெளியே புறப்பட்டார். வசூலாகும் தொகையைக் கொண்டு தனக்கு குளிருக்குப் போர்த்திக் கொள்ள கம்பளி ஆடை வாங்கிட எண்ணியிருந்தார். ஆனால், பலரும் அவரது கூலியைக் கொடுக்காததால், பெரும் ஏமாற்றமும் கவலையும் அவரை ஆட்கொண்டது. எனவே, கவலையை மறக்க கையிலிருந்தக் காசைக் கொண்டு மது வாங்கி அருந்திவிட்டு வீட்டிற்குத் திரும்பிக்கொண்டிருந்தார். வழியில் குளிராலும், பசியாலும் தவித்துக் கொண்டிருந்த ஒரு பிச்சைக்காரனைக் கண்டு மனம் இரங்கி, தன்னுடைய உடையை எடுத்து அவனுக்கு உடுத்தினார். அந்தப் பிச்சைக்காரன் சாப்பிடுவதற்கு ஏதாவது தரும்படி சைமனிடம் கேட்டான். தன்னிடம் ஒன்றும் இல்லாததால், சைமன் அவனைத் தூக்கிக் கொண்டு வீட்டிற்கு வந்தார். அவரது மனைவி மெட்ரீனா, 'சாப்பிட எதுவுமில்லாமல் நாமே தவிக்கும் வேளையில் இவரை ஏன் இங்கே தூக்கிக் கொண்டு வந்தீர்கள்?' என்று கடிந்து கொண்டாள். அதற்கு சைமன், 'பரவாயில்லை, நமக்கு இருக்கும் ஒரு ரொட்டியை மூன்று பாகமாகப் பகிர்ந்து சாப்பிடுவோம். பகிர்ந்துண்டால் பசியாரும் என்பார்கள்' என்றார். அவ்வாறே செய்து மகிழ்ந்தார்கள். வாழ்நாளிலே அன்றுதான் அந்தப் பிச்சைக்காரன் முதன் முறையாகச் சிரித்தான்.

நம் அனைவருக்குமான எல்லாவற்றையும் இந்த பிரபஞ்சம் தருவித்துத் தந்திருக்கிறது. ஆனால் நமக்கோ அவசரம், ஆத்திரம். எங்கே நமக்கு கிடைக்காமல் போய்விடுமோ என்று முட்டி மோதுகின்றோம். உலகில் பஞ்சமும் பட்டினியும் பெரும்பாலும் மனிதர்களால் ஏற்படுவன. இன்று பட்டினி சாவுக்குக் காரணம் பற்றாக்குறை அல்ல. மாறாக, பகிராக்குறையே ஆகும்.

இருப்பவர் இல்லாதவருடன் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்பதுதான் காந்தியடிகளின் தர்மகர்த்தா கொள்கை. அப்போதுதான் சமூகத்தில் சமத்துவம் நிலைபெறும். 'இட்டார் பெரியோர், இடாதார் இழிகுலத்தோர்' என்கிறது தமிழ்நீதி. 'நொய்யிற் பிளவள வேனும் பகிர்மின்கள்' என்று அருணகிரிநாதர் மனித சமூகத்திடம் மன்றாடுகிறார். அரிசியைத் தந்துதவும் நிலையில் இல்லாதவர் நொய்யைத் தந்தால் கூடப் போதும். அதுவும் இயலவில்லை என்றால் அந்த நொய்யில் ஒரு பிளவைக் கொடுத்தாலும் சம்மதமே. தன்னுடையதை பிறரோடு பகிர வேண்டும் என்ற உள்ளம் ஒருவருக்கு இருக்க வேண்டும் என்பதுதான் முக்கியம்.

ஜென் ஞானி ஒருவர் எப்போதும் கவலையற்றுச் சிரித்த முகத்துடனே காணப்படுவார். எனவே அவரை அனைவரும் 'சிரிக்கும் புத்தர்' என்று அன்போடு அழைத்தனர். குழந்தைகளைப் பார்க்கும்போது அவர்களிடம் சிரித்துப் பேசி இனிப்புகளை வழங்குவார். வழியில் பெரியவர்கள் எதிர்ப்பட்டால், அவர்களிடம் கைநீட்டி, 'ஒரு காசு கொடு' என்று கேட்பார். 'உன்னிடம் உள்ளதைப் பிறருடன் பகிர்ந்துகொள்' என்பதுதான் 'ஒரு காசு கொடு' என்று கைநீட்டியதன் பொருள்.

பிச்சை வேறு, பகிர்தல் வேறு. பிச்சையானது தருபவனை உயர்த்தி, பெறுபவனைத் தாழ்த்துகிறது. பகிர்தலிலோ உயர்வும் இல்லை, தாழ்வும் இல்லை. ஒருவன் வாய் திறந்து கேட்டபின் தருவது பிச்சை. கேட்பதற்கு முன்பே ஒருவனின் தேவையறிந்து செய்யப்படுவது பகிர்வு. எப்படி ஈகை செய்ய வேண்டும் என்பதைக் கூறவந்த புறப்பொருள் வெண்பா மாலை, முல்லைக்குத் தேரினை கொடுத்த பாரியையும், மயிலுக்கு போர்வை அளித்த பேகனையும் உதாரணமாகக் காட்டுகிறது. கடையெழு வள்ளல்களில் மற்றவர்கள் எல்லாரும் மனிதர்களுக்குக் கொடுத்தார்கள். மனிதர்கள் தம் தேவையை வாய் திறந்து கேட்பார்கள். முல்லைக் கொடியும், மயிலும் எங்களுக்கு இது வேண்டும் என்று கேட்க வாய்ப்பில்லை. இரவாமலேயே கொடுத்த இவர்களின் ஈகை உயர்ந்தது. அறிவாளிகளுக்கு இவர்களின் செயல் முட்டாள்தனமாக தோன்றலாம். ஏனென்றால், பல நேரங்களில் அன்புச் செயல்களும், இரக்கச் செயல்களும் முட்டால்தனமாகவே பார்க்கப்படுகிறது. அன்பு, இரக்கம் போன்ற உணர்வுகள் தோன்றும்போது அறிவு மறைந்து போகிறது. தமிழில் இதைக் 'கொடைமடம்' என்பர். மடம் என்றால் மடத்தனம். சிந்தித்துப் பார்த்தால் கொடையே மடத்தனம்தான். பகிர்தல் என்றால், உணவு, பணம், பொருள் இவற்றை மட்டுமல்ல. அன்பை, இரக்கத்தை, நல்வார்த்தைகளை, நல்லெண்ணத்தை கொடுப்பதும் பகிர்வே.

வசந்தம் வீசும்...



# காலம் நம் காலடியில்

– திரு. அல்போன்ஸ் மோசஸ்-புதுச்சேரி-9.

இரயில் நிலையம் அந்த நகரத்தின் முக்கிய பகுதியில் இருந்தது. தென் மாநிலம் மற்றும் வட மாநிலத்து தொடர் வண்டிகள் அடிக்கடி வருவதும் போவதுமாக எப்போதும் பரபரப்பாகக் காணப்படும்.

அன்று திடீரென்று மிகப் பெரிய விபத்து நடந்து விட்டது. மூன்றாவது பிளாட்பாரத்தில் நின்று கொண்டிருந்த 50 பேர் இரயிலில் அடிபட்டு இறந்துவிட்டனர். ஆனால் ஒருவர் மட்டும் உயிர் பிழைத்தார்.

எப்படி இந்த விபத்து நிகழ்ந்திருக்கும் என்று ஆராய்ச்சி நடத்தினர். பிளாட்பாரத்தில் நின்று கொண்டிருந்த அனைவரும் இறந்தபோதிலும் ஒருவர் மட்டும் உயிர் பிழைத்தது அனைவருக்கும் ஆச்சரியத்தை அளித்தது. மக்கள் அனைவரும் அவரைச் சூழ்ந்து கொண்டனர்.

வழக்கம்போல பத்திரிக்கையாளர்கள் அவரை அணுகி இரயில் விபத்து குறித்து கேள்விக் கணைகளைத் தொடுத்தனர். அவரும் பதட்டப்படாமல் சொல்ல ஆரம்பித்தார்.

“அது ஒன்னுமில்லங்க. இரயில் நிலைய அறிவிப்பில் நடந்த பிழைதான் விபத்துக்குக் காரணம்” என்றார். “அப்படி என்ன தவறு” என்று நிருபர்கள் ஆவலாகக் கேட்க ஆரம்பித்தனர்.

“எல்லாரும் டில்லி எக்ஸ்பிரஸில் ஏறிப் பயணிக்க மூன்றாவது பிளாட்பாரத்தில் நின்று கொண்டிருந்தனர். அப்போது அறிவிப்பாளர் டில்லி எக்ஸ்பிரஸ் மூன்றாவது பிளாட்பாரத்தில் வந்து கொண்டிருக்கின்றது. என்று அறிவித்தார். உடனே அனைவரும் தப்பித்தோம் பிழைத்தோம் என்று திடுதிப்புனு பிளாட்பாரத்திலிருந்து தண்டவாளத்தில் குதித்து விட்டனர். அதனால இரயில் அனைவரையும் அடித்து அனைவரும் செத்துப் போயினர்” என்றார்.

உடனே நிருபர்கள் “அப்ப நீங்க மட்டும் எப்படி புத்திசாலித்தனமா தண்டவாளத்தில் குதிக்காமல் தப்பித்து விட்டீர்கள்” என்று கேட்டனர். அதற்கு அவர் நான் தற்கொலை செய்து கொள்வதற்காக தண்டவாளத்தில் தலை வைத்துப் படுத்திருந்தேன். அறிவிப்பைக் கேட்டவுடன் பிளாட்பாரத்தில் ஏறிப்படுத்துக் கொண்டேன். அதனால் நான் உயிர் பிழைத்தேன் என்று பதிலளித்தார்.

இது ஜோடிக்கப்பட்ட கதையாக இருந்தாலும் இப்படித்தான் பலபேர் எதைப்பற்றியும் சிந்தித்துப் பார்க்காமல் ஆன்மிகம், அரசியல், சமூகம் எல்லாவற்றிலும் கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்று ஆட்டு மந்தைபோல ஆமாம் போட்டு வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

பார்த்தல், நல்லதா கெட்டதா என்று ஆராய்தல் பிறகு நல்லவற்றைச் செயல்படுத்துதல் என்று வாழப் பழகிக் கொள்வோம்.(See,Judge,Act)

நமக்கு ஓர் ஆண்டு இறைவனால் கொடுக்கப்பட்டுள்ளது. இனி வரும் காலம் நம் காலடியில் தவம் கிடக்கின்றது. பழைய கால நிகழ்வுகளை சீர்தூக்கிப் பார்த்து புதிய நிகழ்வுகளுக்கு வழிவகுப்போம். திடமான உடலுடனும் மனதுடனும் நோய்நொடியின்றி நீண்டநாள் வாழ்வோம். புலர்ந்துள்ள புத்தாண்டு புதுப்பொலிவோடு நம்மை வழி நடத்தட்டும்.

# புனித வெரோனிக்காவின் கைக்குட்டை



செல்மா லேகர்லோஃப்

(சுவீடன் நாட்டின் நோபல் பரிசு பெற்ற முதல் பெண் எழுத்தாளர்)

திரு. ஜெயராஜ் தானியேல், முத்தியால்பேட்டை, புதுவை-3

சென்ற இதழ் தொடர்ச்சி...

தெருவின் ஒருபுறத்தில் கடையொன்று இருப்பதைப் பார்த்து, அதனுள் அவளைத் தூக்கிச் சென்றான். அங்கே நாற்காலியோ பெஞ்சோ எதுவுமில்லை. ஆனால், நல்லிதயம் கொண்ட கடைக்காரர் கல்தரையில் கம்பளத்தை விரித்து படுக்கை தயார் செய்தார்.

அவள் சுயநினைவிழக்கவில்லை. இருப்பினும் தலைச்சுற்றலால் உட்கார முடியாமல் படுத்திருக்க வேண்டியதாயிற்று.

கடைக்காரரிடம், “நீண்ட பயணம் மேற்கொண்டாள். இரைச்சலும் கூட்டநெரிசலும் அவளைப் படுத்திவிட்டன. முதுமையை வெல்ல எவரால் முடியும்!” என்று சொன்னான் சல்பிஷியஸ்.

“இளைஞர்களுக்கும் இது ஒரு சோதனையான நாள் தான். மூச்சுவிடவே சிரமமாயிருக்கிறது. சூறாவளிக் காற்றடித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை” என்றார் கடைக்காரர்.

சல்பிஷியஸ் குனிந்து மூதாட்டியைப் பார்த்தான். அன்றைய பரபரப்பிற்குப் பிறகு அயர்ந்து தூங்கிவிட்டிருந்தாள்.

அவள் தூங்கி எழும் வரை கடையின் வாசலில் நின்று கூட்டத்தை வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

ரோமாபுரி ஆளுநருக்கு ஓர் இளம் மனைவி இருந்தாள். ∴பொஸ்தினா நகரத்திற்கு வந்த நாளின் முந்தைய இரவில் அவள் ஒரு கனவு கண்டாள்.

அவள் வீட்டின் மேல்தளத்தில் நின்று கொண்டிருப்பதாகவும், கீழே, கிழக்கத்திய பாணியில், பளிங்குக் கற்கள் பதிக்கப்பட்டு அரியவகை செடிகளால் அலங்கரிக்கப்பட்டிருந்த அரங்கத்தை நோட்டம் விட்டாள்.

அங்கே, உலகத்திலுள்ள அத்தனை பிணியாளர்களும், பார்வையற்றவர்களும், உடல் ஊனமுற்றவர்களும் குழுமியிருந்தார்கள். உடல் முழுவதும் கட்டிகளுடன் தொற்றுநோயாளிகளும், முகம் சிதைந்த தொழுநோயாளிகளும், முடக்குவாதத்தால் பாதிக்கப்பட்டு நகர முடியாமல் தரையில் கிடந்தவர்கள் மற்றும் எல்லாவகையான கேடுள்ளவர்களும் வலியிலும் வேதனையிலும் துடித்துக் கொண்டிருந்தார்கள்.

எல்லோரும் வீட்டின் முன்வாசலில் கூடி மாளிகைக்குள் நுழைய முயன்று, கதவை இடித்தார்கள்.

கடைசியில், ஒரு அடிமை கதவைத் திறந்து வாசற்படிக்கு வந்து ‘என்ன வேண்டும்’ என்று கேட்டது அவள் காதில் விழுந்தது.

அதற்கு அவர்கள், “கடவுள் உலகுக்கு அனுப்பிய ஆகச் சிறந்த தீர்க்கதரிசியைத் தேடுகிறோம். எல்லா பிணிகளையும் வெல்லக்கூடிய, நாசரேத்தூரைச் சார்ந்த அவர் எங்கே? எல்லா துன்பங்களிலிருந்தும் எங்களை விடுவிக்கக்கூடியவர் எங்கே?” என்று கத்தினார்கள்.

ஏழை அயலானை விரட்டும் அரண்மனைக் காவலாளியைப் போல, அந்த அடிமையும் ஆணவத்துடனும் அலட்சியமாகவும் “அந்தத் தீர்க்கதரிசியைத் தேடுவதால் உங்களுக்கு எந்தப் பயனும் இல்லை. பிலாத்து அவரைக் கொன்றுவிட்டார்.” என்று பதிலளித்தான்.

பிறகு, அந்த நோயாளிகளின் மத்தியில் எழுந்த துயரமும் புலம்பலும் பற்கடிப்பும் அவளால் காதுகொடுத்துக் கேட்க முடியவில்லை. கருணையால் அவள் மனங்கசிந்து, கண்ணீர் பெருக்கெடுத்தது. அவள் விம்மி அழும்போது விழித்துக் கொண்டாள்.

மறுபடியும் தூக்கத்தில் ஆழ்ந்தபோது, இன்னொரு கனவு கண்டாள். மேல்தளத்தில் நின்று கொண்டு கீழே உள்ள விசாலமான அரங்கை நோட்டம் விடுகிறாள்.

தொடரும்..

# விண்ணக வாழ்வின் இரண்டாம் ஆண்டு நினைவு



அருள்தந்தை
**அகஸ்டின் ரொலாண்ட்** MEP, France
மண்ணில் 02-05-1925
விண்ணில் 13-01-2020

காரிருளில் நடந்து வந்த மக்கள் பேரொளியைக் கண்டார் கள், சாவின் நிழல் சூழ்ந்துள்ள நாட்டில் குடியிருப்போர் மேல் சுடர் ஒளி உதித்துள்ளது.
(எசா.9-2)

| | | |
|---|---|---|
| பெற்றோர் | : | பால் - லூசியா |
| குருத்துவம் | : | 29-05-1949 |
| 1949-1952 | : | தீபத், சீனாவில் இறைபணி. |
| 1953-1960 | : | புதுவை பெத்தி செமினேர்-ஆசிரியர் பணி. |
| 1961-1963 | : | புதுவை சம்மனசுகளின் இராக்கினி ஆலயம் உதவி தந்தை. |
| 1963-1969 | : | புதுவை சம்மனசுகளின் இராக்கினி ஆலயம் பங்கு தந்தை. |
| 1970 | : | தமிழ் கற்றல் - ஆத்தூர். |
| 1971-2002 | : | திருக்கோவிலூர் நல்லாயன் ஆலயம், முதல் பங்குதந்தை. |
| 2002 | : | பணி ஓய்வு-பிரான்ஸ். |

**நினைவு திருப்ப-:**
13-01-2022 மாலை 6.00 மணிக்கு திருக்கோவிலூர் **நல்லாயன் ஆலயத்தில்** நடைபெறும்.

செபங்களுடன்
**சூசைக்கண்ணு-குழந்தை தெரஸ் குடும்பத்தினர்.**
திருக்கோவிலூர்.

## 2-ஆம் ஆண்டு நினைவு 8-ஆம் மாதம் நினைவு

மண்ணில்: 12-12-1940
விண்ணில்: 10-01-2020





மண்ணில்: 17-01-1947
விண்ணில்: 22-05-2021

திரு A. **செல்வராஜ்**
Central Railway Retd.

திருமதி S. **லூர்துமரி**

நான் ஒருபோதும் உன்னை கைவிடமாட்டேன், உன்னை விட்டு விலகமாட்டேன்
- எபி 13.5

இவர்களது ஆன்ம இளைப்பாற்றிக்காக 10-01-2022 திங்கள் காலை 6.00 மணிக்கு திண்டிவனம், புனித வியாகுல அன்னை ஆலயத்திலும், அணையேரி, காலை 6.00 மணிக்கு, புனித மரிய மதலேனாள் ஆலயத்திலும் திருப்ப- நிறைவேற்றப்படும்.

பிரிவால் துயருறும்
**மகன்கள், மகள்கள், மருமகள்கள், மருமகன்கள், பேரப்பிள்ளைகள் மற்றும் உறவினர்கள்.**

## விண்ணக வாழ்வின் 11-ஆம் ஆண்டு நினைவு

மண்ணில்:21-03-1925



விண்ணில்:08-01-2011

**திரு.A.லூர்துசாமி** ஆசிரியர்

**"உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே. என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்" - யோவா.11:25**

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக 8-1-2022 சனிக்கிழமை மாலை 6.30 மணிக்கு பணிக்கன்குப்பம், புனித விண்ணேற்பு அன்னை ஆலயத்தில் திருப்ப- நிறைவேற்றப்பட்டது.

பிரிவால் துயருறும்
**மனைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.**
பணிக்கன்குப்பம்.



**திருமதி. A. பெரியநாயகம்,**
Retd. Tr.

**மண்ணில்: 06-07-1931**
**விண்ணில்: 16-01-2009**

# விண்ணக வாழ்வின்
# 13-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

*"உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்" – யோவான்.11:25*

*அன்பின் ஊற்றாய் எங்களைப் பேணி*
*பண்பின் பிறப்பிடமாய் பாதுகாத்த*
*பாசத்தின் உறைவிடமாய் எங்கள் தாய்*
*நேசத்தின் நினைவிடமாய் திருமதி.* **A. பெரியநாயகம்**
*இம் மண்ணில் மலர்ந்து ஆன்மாவிற்கு*
*விண்ணில் ஒளிரும் நித்திய இளைப்பாற்றியை*
*கண்ணின் கருவிழியாய் நித்தமும் தந்திட*
*இறைவா இறைஞ்சுகிறோம்*
*விரைவாய் அருள்வாய் ஆமென்.*

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக 16-01-2022 **ஞாயிற்றுக்கிழமை** காலை 6.00 மணிக்கு கடலூர், கம்மியம்பேட்டை, புனித சூசையப்பர் ஆலயத்திலும், காலை 6.00 மணிக்கு **கடலூர், புனித கார்மேல் அன்னை ஆலயத்திலும்,** காலை 6.15 மணிக்கு **புதுவை, புனித ஜென்மராக்கினி அன்னை பேராலயத்திலும்,** காலை 7.30 மணிக்கு, **திரு இருதய ஆண்டவர் பசிலிக்காவிலும்** இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக திருப்பலி நிறைவேற்றப்படும்.

பிரிவால் துயருறும்
கணவர்: **S. ஆரோக்கியசாமி,**
**மகன்கள், மகள்கள், மருமகன்கள், மருமகள்கள் மற்றும் பேரப்பிள்ளைகள்.**

---

# விண்ணக வாழ்வின் 12-ம் ஆண்டு நினைவு அஞ்சலி

பிறப்பு : 05-11-1942
இறப்பு : 18-01-2010



பிறப்பு : 08-04-1936
இறப்பு : 08-01-2010

**திருமதி. D. ஜெயராக்கினி திரு. A. ஞானப்பிரகாசம் Rtd.H.M.**

உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான் (யோவா 11:25)

**செபம்**

இரக்கம் நிறைந்த இறைவா, எங்கள் குடும்பத்தில் ஒளி விளக்காய் இருந்து இவ்வுலகைவிட்டு இறைவனின் திருவடியில் இளைப்பாறும்படி அழைத்துக் கொள்ளப்பட்ட எம் பெற்றோருக்கு நித்திய இளைப்பாற்றியை அளித்தருளும், ஆமென்.

08-01-2022 மற்றும் 18-01-2022 காலை 6.00 மணிக்கு அணையேரி, புனித மகதலா மரியா ஆலயத்தில் நினைவு திருப்ப- நிறைவேற்றப்படும்.

பிரிவால் வாடும்

**மகன் : G. ஜெய கொர்னேலியஸ்-M.சனேத்மரி**
**மகன் : Fr.J.M.வியானி (ஜான்சி மறைமாவட்டம், U.P)**
**மகள் : ஜெயசெல்வி- ஜேம்ஸ் பீட்டர் (லேட்)**
**மகள் : ஜெயசாந்தி (லேட்) - F. லூக்காஸ் (லேட்)**
**பேரப்பிள்ளைகள் மற்றும் உற்றார், உறவினர்கள். அணையேரி.**

---

# விண்ணக வாழ்வின்
# 15-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

மலர்ந்தது: 13-03-1990



உதிர்ந்தது:15-01-2007

**S. அமலாராணி**

**"இனி அவர்கள் சாகமுடியாது அவர்கள் வான தூதரைப்போல இருப்பார்கள்" லூக்.20:36**

விண்ணக தந்தையே இறைவா! எங்களுடன் வாழ்ந்து எங்களைவிட்டு பிரிந்த எங்கள் மகள் அமலாராணிக்கு நித்திய இறைப்பாற்றியை தந்தருள வேண்டுகிறோம். 15-01-2022 அன்று சனிக்கிழமை காலை 6.00 மணிக்கு நெல்-த்தோப்பு புனித விண்ணேற்பு அன்னை ஆலயத்தில் திருப்ப- நிறைவேற்றப்படும்.

**பிரிவால் துயருறும்**
பெற்றோர் : ஸ்தனிஸ்லாஸ் - மோட்சம்
சித்தி:Sr.இமாகுலேட், Presentation Convent.
சகோதரிகள்: ரெஜினா நிக்கோலாஸ்
மேரி சங்கீதா மனோஜ் மற்றும் உறவினர்கள்.
நெல்லித்தோப்பு, புதுவை.



ANANDOU JOHN V.P.
(S/o. Dr.A.Anandou)
(Retd. Food Safety Officer)

பிறப்பு 08.05.1952 — இறப்பு 16.01.2021

## விண்ணக வாழ்வின் முதலாம் ஆண்டு நினைவு அஞ்ச-

*"வாழ்நாளில் என்னை நேசித்தவர்களே, மரணத்தில் என்னை மறவாதீர்"*

இரக்கம் நிறை இறைவா, குடும்பத்தின் ஒளி விளக்காய், கல்வியில் ஆசானாய், அரசுப் பணியை செவ்வனவே முடித்தவராய், பொதுநலச் சேவையில் தன்னார்வத் தொண்டு புரிந்தவராய், நட்புக்கு இலக்கணம் வகுத்தவராய், கடமையை செய்வதில் பிறருக்கு வழிகாட்டியாய் வாழ்ந்து இறையழைப்பை இனிதே ஏற்று மரித்த

**அனந்து ஜான்**

அவர்களின் ஆன்மா உமது திருமுக ஒளியில் ஒளிர்ந்திட வேண்டுகிறோம்.

பிரிவால் துயருறும்

**மனைவி: சுந்தரி அனந்து**
**மகள்கள், மருமகன்கள்,**
**பேரப்பிள்ளைகள் மற்றும் சகோதர, சகோதரி குடும்பத்தினர்.**

நினைவு திருப்ப-: 16-01-2022 ஞாயிறு காலை 7.00 மணிக்கு கோட்டுச்சேரி, புனித சகாய அன்னை ஆலயத்தில் நிறைவேற்றப்படும்.



திரு. **B. ஜேம்ஸ்** *P.E.T., A.H.M. (Retd)*
புனித அன்னாள் மேல்நிலைப் பள்ளி, திண்டிவனம்.

**மண்ணில்: 06-09-1951**
**விண்ணில்: 17-01-2015**

## விண்ணக வாழ்வின் 7-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

*"உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்" – யோவான்.11:25*

**ஜெபம்**

அன்பின் ஆண்டவரே, இரக்கமே உருவான இயேசுவே!
மண்ணக வாழ்வில் மறைந்தாலும் எங்கள் மனதில்
என்றென்றும் வாழ்ந்துக் கொண்டிருக்கும் எங்கள் அன்பு தெய்வம்

திரு. **B. ஜேம்ஸ்** *P.E.T., A.H.M. (Retd)*

புனித அன்னாள் மேல்நிலைப்பள்ளி, திண்டிவனம். அவரது ஆன்மா உம்மில் அமைதி பெற இறைஞ்சி மன்றாடுகிறோம்.

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக 17-1-2022 **திங்கட்கிழமை** காலை 6.00 மணிக்கு திண்டிவனம், பிரகாசபுரத்திலுள்ள புனித அந்தோணியார் ஆலயத்தில் நிறைவேற்றப்படும் திருப்பலியில் கலந்து கொண்டு அன்னாரின் ஆன்ம சாந்திக்காக செபிக்க வேண்டுகிறோம்.

பிரிவால் துயருறும்

**மனைவி, மகள்,**
**மருமகன், மகன், மருமகள்,**
**பேரப்பிள்ளைகள்**
**மற்றும் உறவினர்கள், நண்பர்கள்.**
திண்டிவனம்.



# தனிப்பெரும் சேவகி

(அன்னை தெரேசாவின் அதிசய வரலாறு)

(வெளியீடு: நெய்தல்வெளி, நாகர்கோவில்)

- டாக்டர் **தீபக் தாமஸ்,**
பல் மருத்துவர், புதுவை.



12.12.2021 இதழ் தொடர்ச்சி

புனித மேரி பள்ளியின் பிரிவு பள்ளிதான்.
மோதிஜில் குப்பத்தின் மத்தியில் இருந்தது.
இல்லாத பிள்ளைகளுக்கு இலவச கல்வி.
வங்காள மொழியில் பயிற்றுவிக்க வேண்டும்.

பசியில் காதடைத்து போன பிள்ளைகள்
குறுக-லும் குறுகலான சிறிய அறை,
குறுக்கும் நெடுக்குமாய் நடந்து யோசித்தாள் தெரசா.
கல்வி ஒன்றே இவர்கள் கண் திறக்கும்.
பசியையும் பிணியையும் அதுவே பிரிக்கும்.
உணர்ந்து கொண்டாள் உன்னத மகள்.
பசி தாகம் மறந்து பாடமெடுத்தாள்.
உயிரை உருக்கி ஒழுக்கம் ஓதினாள்.

கற்றதனைத்தும் கற்றுத் தந்தாள்.
அழுக்கடைந்த பிள்ளைகளை அன்பாய் தொட்டாள்.
கட்டியணைத்து கதைகள் சொன்னாள்.
அன்பு போதித்தாள். அறம் போதித்தாள்.
ஆசிரியராக அல்ல அன்னையாகவே விளங்கினாள்.
ஆச்சரியமூட்டும் வகையில் அவர்களும் படித்தார்கள்.

1937
தெரசாவுக்கு 26 வயது.
கன்னிமை, கீழ்ப்படிதல், ஏழ்மை
மூன்று ஆணிகளையும் முடிவாய் பெற்றாள்.
பொன்மகள் போல உடையணிந்து
இறைமகனும் மணவாட்டியானாள்.
லொரேட்டோவின் வழக்கப்படி
அன்றுமுதல்
அன்னை என்ற அடைமொழியை பெற்று
அன்னை தெரசா என்றழைக்கப்பட்டார்.

அன்னை தெரசாவுக்கு அடுத்த பொறுப்பு.
புனித மேரி பள்ளியின் தலைமை ஆசிரியையாய்,
மோதிஜில் பள்ளியி-ருந்து விலக வேண்டும்.
வேறு வழியின்றி விலகிக் கொண்டார்.

1939
இரண்டாம் உலகப்போர் சமயம்.
பிரித்தானியா நாடு பங்குபெற்றதால்
பாரதமும் பாதிக்கப்பட்டிருந்தது.

பிரித்தானியாவின் எதிரி ஜப்பான்
பர்மாவில் புகுந்தது ஜப்பான் ராணுவம்
பயந்து போன பர்மியர்கள்
புக-டமானது கொல்கத்தாவில்.

பிரித்தானியா ராணுவமும் கொல்கத்தா வந்தது.
பிரச்சினையை சமாளிக்க வேண்டுமே.
அவர்கள் ராணுவம் தங்குவதற்கு வசதியாக
அன்னையின் பள்ளியை எடுத்துக் கொண்டனர்.

அப்பள்ளியிலுள்ளோர் வெளியேற வேண்டிய கட்டாயம்
அன்னையும் வேறு இடத்தில் தங்கினார்.

பர்மிய அகதிகள் பல லட்சம்
புகுந்து அடைக்கலமாயினர் கொல்கத்தாவில்
இருப்பவர்களுக்கே அங்கு ஏதுமில்லை.
இன்னும் பலர் புகுந்தால் எப்படி?
உணவுக்கு கடும் பஞ்சம்.
விலைவாசி விண்ணைத் தொட்டது.
மக்கள் பலர் மாண்டு போயினர்
'கொல்கொத்தா பஞ்சம்' என
காலம் குறித்துக் கொண்டது.

இருப்பிடத்திலேயே இருக்கலாம்தான். ஆனால்
இருப்பு கொள்ளுமா நம் அன்னைக்கு
வெளியேறி வீதிக்கு வந்தார்.
சில நல்லவர்களை கூட்டிக் கொண்டு
சேரியில் புகுந்து சேவையைத் துவக்கினார்.
அன்று அவர் துவங்கிய சேவை
அகிலத்திற்கே அவரை அடையாளம் காட்டியது.

தொடரும்...



## விண்ணக வாழ்வின் நான்காம் ஆண்டு நினைவு அஞ்ச-





# திரு. S. தேவராயன்

**மண்ணகம் 28-02-1936**
**விண்ணகம் 01-01-2018**

உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவர் இறப்பினும் வாழ்வார் - யோவா 11:25

**செபம்**

இறைவா! அன்பிற்கும் இரக்கத்திற்கும்
உறைவிடமான ஆண்டவரே,
ஆத்துமங்களை இரட்சிப்பவரே,
உம்மால் தேர்ந்துகொள்ளப்பட்ட
திரு. S. **தேவராயன்**
அவரின் ஆத்துமத்திற்கு இரக்கம்
புரிந்து, முடிவில்லா பிரகாசத்தை
தந்தருள உம்மை மன்றாடுகிறோம் -
ஆமென்.

பிரிவால் துயருறும்
**மனைவி**
**பிள்ளைகள் மற்றும் குடும்பத்தினர்.**

**திருப்ப-:** 01-01-2022
காலை 7.00 மணி திருப்ப-
புனித விண்ணேற்பு அன்னை ஆலயம்
நெல்-த்தோப்பு, புதுவை-5.
காலை 7.30 மணி திருப்ப-
திரு இருதய ஆண்டவர் பசி-க்கா,
புதுவை ஆகிய ஆலயங்களில் திருப்ப-
ஒப்புக்கொடுக்கப்படும்.

**Published and Printed by Very Rev. Msgr. A. Arulanandam on behalf of Most Rev. Dr. A. ANANDARAYAR, D.D.,D.C.L.,**
Archbishop of Pondicherry & Cuddalore. Printed at Mission Press, 196, Cathedral Street, Puducherry - 605 001.
Published from Mission Press, 196, Cathedral Street, Puducherry-605 001. Editor: **Very Rev. Msgr. A. Arulanandam.** Manager : **Very Rev. Msgr. A. Arulanandam.**